[4th July 1957

SRI P. S. CHINNADURAI : தொழிற்சங்கத் தலைவர்களையும், மதுரை மில் நிர்வாகிகளையும் கனம் மந்திரி அவர்கள் இங்கே அழைத்து, உடனடியாக ராஜ்யத்தின் நலனை உத்தேசித்து இது விஷயத்திலே ஒரு முடிவுக்கு வந்து ஆகவேண்டுமென்று தங்களுடைய செல்வாக்கை உபயோகித்து ஒரு முடிவுகான உதவிபுரிவார்களா ?

THE HON SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வதற்கு முன்பே, நான் நேரடியாகச் சென்று மேனேஜ்மெண்டாரையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் கூட்டிப்பேசினேன். அதன் விளைவாக இருவரும் ஒப்புககொண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி நடந்தால் உடனடியாக மில் திறந்து வேலை நடக்கும். தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படியாக இப்பொழுது சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

SRI A. P. C. VEERABAHU : மேனேஜ்மெண்டும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் நேரடியாகக் கலந்து பேசுவது இரண்டு மூன்று நாட்கள் ஆகத் தடைப்பட்டிருக்கிறது என்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படித் தடைப்பட்டிருந்தால் தடையை நீக்க சர்க்கார் உதவுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தூத்துக்குடியில் தடைப்பட்டிருக்கிறது. ஆனால் மதுரையில் இல்லை. தூத்துக்குடியில் அந்த ஒப்பந்தத்தின்படி பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக லேபர் ஆபீசர் அவர்கள் இடத்தில் தொடர்ந்து நடத்தும்படிச் சொல்லியிருக்கிறோம்.

SRI M. JAGANNATHAN : மதுரையில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருப்பதன காரணமாக எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனபதை கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 14,000.

SRI K. VINAYAKAM : Now that the workers have infringed the conditions of the agreement, if they realise their mistake, express regret, agree to get back to work and compensate the loss sustained by their inaction, will the Government prevail upon the management to open the mills and bring about a reapproachment between the employer and the workers?

THE HON. SRI R. VENKATARAMAN : I think this question is totally misconceived. We are anxious to smoothen the relationship between labour and capital and we try to bring about a re-adjustment in their relationship in the best manner possible. As it is, certain anomalies are bound to occur whenever new work-loads are sought to be introduced. The management should also have shown some patience and tried to keep the mill open for a day or two before precipitously closing it down. That is why, I said in my last statement that both parties have been at fault and that they should try to come together on the basis of the agreement.

SRI K. ANBAZHAGAN : தொழிலாளிகள் முதலாளிகள் ஆகிய இரு பகுதிகளிலேயும் தவறுகள் நடைபெறுவதால்தான் நாட்டிற்கும் பெரியதொரு இழுப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால் அதனை நீடிக்க விடுவதை மாற்றுவதற்கு ஒரு முறையாக இத்தகைய ஆலைகளை தேசிய உடமை ஆக்கிவிடுவோமென்று அரசாங்கத்தார் அறிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு தொழிற்சாலையை தேசீய உடமை ஆக்குவது அவ்வளவு சுலபம் அல்ல. தகராறு வருகின்றபோதெல்லாம் தேசீய உடமை ஆக்கிவிடுவோம் என்று சொல்வது சாத்தியமல்ல.